# குடியாத்தம் நகராட்சி

## 2023–2024 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

குடியாத்தம் நகராட்சி 1886–ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக நிறுவப்பட்டது. பின்னர் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டு 1973 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 27–ஆம் தேதி வரை வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசாணை எண்.143, நாள் : 25.01.1973–ன்படி 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28–ஆம்தேதி "முதல்நிலை" நகராட்சியாக உயர்வு பெற்று இயங்கி வருகிறது.

### I. அமைப்பும் மேலாட்சியும்:–

#### 1. ஆட்சி எல்லை :–

இந்நகராட்சியின் பரப்பளவு 4.92 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். எல்லையில் அறிக்கையாண்டில் யாதொரு மாறுதலும் செய்யப்படவில்லை.

இந்நகராட்சியின் மக்கள் தொகை 1991–ஆம் ஆண்டின் மக்கள் தொகைக ணக்கெடுப்பின்படி 83,232 ஆகும். 2001–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 91,376 ஆகும். 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 91,558 ஆகும். 2021 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ,இந்நகராட்சியின் மக்கள் தொகை 91,558 இதில் ஆண்கள் 45,135, பெண்கள் 46,423 ஆகும்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை 15,479 இதில் ஆண்கள் 7,493 மற்றும் பெண்கள் 7,986 ஆகும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகையினை அடிப்படையாக கொண்டு வார்டுகள் திருப்திகரமாகவும் நிர்வாகத்திற்கு வசதியாகவும் மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

#### 2) நகரமன்ற தலைவர் மற்றும் உறுப்பினகள்:–

##### நகரமன்ற தலைவர்

திரு.எஸ்.சௌந்தர்ராசன் அவர்கள் 04.03.2022 ஆம் தேதி மறைமுக தேர்தல் நடத்தப்பட்டு 05.03.2022 முதல்நகரமன்ற தலைவர் பதவி வகித்து வருகின்றார்.

##### துணைத்தலைவர்

திருமதி.பூங்கொடி அவர்கள் 04.03.2022 ஆம் தேதி மறைமுக தேர்தல் நடத்தப்பட்டு 05.03.2022 முதல் நகரமன்ற துணைத்தலைவராக பதவி வகித்து வருகின்றார்.

| குழுக்கள் | 30.03.2022 முதல் |
|---|---|
| நியமனக்குழு உறுப்பினர் | ஜி.எஸ்.அரசு, வார்டு எண்.28 |
| ஒப்பந்தக்குழு உறுப்பினர் | கே.விஜயன், வார் எண்.15 |
| மேல்முறையீட்டுக் குழு உறுப்பினர் | திருமதி.கே.தேவகி, வார்டு எண்.22 |
| | திரு.பி.மோகன், வார்டு எண்.23 |
| | திருமதி.ஹஸீனா, வார்டு எண்.30 |
| | திரு.எம்.மனோஜ், வார்டு எண்.36 |

மேற்கண்ட உறுப்பினர்கள் பதவி வகித்து வருகின்றனர்.

<u>நகரமன்ற உறுப்பினர்கள் விவரம்</u>

| வார்டு எண் | நகரமன்ற உறுப்பினர்கள் பெயர் திரு / திருமதி | வார்டு எண் |
|---|---|---|
| 1 | ஆஜிரா ச | 1 |
| 2 | அன்வர் பாஷா அ | 2 |
| 3 | நவீன் சங்கர் பி எஸ் | 3 |
| 4 | ஏகாம்பரம் கொ மா | 4 |
| 5 | கோவிந்தராஜ் ந | 5 |
| 6 | முஷீரா பேகம் இ | 6 |
| 7 | கற்பகம் எம் | 7 |
| 8 | கவிதா பா | 8 |
| 9 | சௌந்தர்ராஜன் மே | 9 |
| 10 | பாபு சி என் | 10 |
| 11 | புவியரசி த | 11 |
| 12 | மேகநாதன் ப | 13 |
| 13 | நளினி த | 14 |
| 14 | விஜயன் கே | 15 |
| 15 | சுமதி | 16 |
| 16 | குகன் எம் எஸ் | 17 |
| 17 | செல்வி அன்பு | 18 |
| 18 | இந்துமதி கோ | 19 |
| 19 | ஜாவித் அகமத் | 20 |
| 20 | ரேணுகா பா | 21 |
| 21 | தேவகி கா | 22 |
| 22 | மோகன் பி | 23 |
| 23 | தண்டபாணி அ | 25 |
| 24 | கோபாலகிருஷ்ணன் கே.வி | 26 |

| | | |
|---|---|---|
| 25 | சிட்டிபாபு அ | 27 |
| 26 | அரசு ஜீ எஸ் | 28 |
| 27 | லாவண்யா கு | 29 |
| 28 | ஹஸினா | 30 |
| 29 | சீதாலட்சுமி சி | 31 |
| 30 | தீபிகா த | 32 |
| 31 | ரேவதி ஈ மோ | 33 |
| 32 | ராணி பி | 34 |
| 33 | கன்னிகா பரமேஸ்வரி மா | 35 |
| 34 | மனோஜ் ம | 36 |

19.02.2022 அன்று நகரமன்ற உறுப்பினர்கள் தேர்தல் நடைப்பெற்றது. 36 வார்டுகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் 04.03.2022 இல் நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் தேர்தல் நடைப்பெற்றது. திரு.எஸ்.சௌந்தர்ராசன், நகரமன்ற தலைவராக 05.03.2022 முதல் பதவி வகித்து வருகிறார்.

அ) நகரமன்ற கூட்டங்கள்:–

அறிக்கையாண்டில் நகரமன்ற தலைவர் தலைமையில் 01.04.2023 முதல் 31.03.2024 வரை 1 சாதாரண கூட்டம் மற்றும் 11 அவசர கூட்டங்கள் நடைப்பெற்றது. இக்கூட்டங்களில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 206 ஆகும்.

ஆ) நியமனக்குழு கூட்டங்கள்:–

01.04.2023 முதல் வார்டு எண்.28, ஜி.எஸ்.அரசு நியமனக்குழுவின் உறுப்பினராக உள்ளார். அறிக்கையாண்டில் நியமனக்குழு கூட்டம் 29.12.2023 அன்று ஒரு முறை நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை 1 ஆகும்.

இ) வரிமேல் முறையீட்டு குழு:–

01.04.2023 முதல் வார்டு எண்.22, திருமதி.கே.தேவகி, வார்டு எண்.23, திரு.பி.மோகன், வார்டு எண்.30, திருமதி.ஹஸீனா மற்றும் வார்டு எண்.36, திரு.எம்.மனோஜ் ஆகியோர் மேல்முறையீட்டு குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். அறிக்கையாண்டில் கூட்டங்கள் நடைபெறவில்லை.

ஈ) ஒப்பந்தக்குழு:–

01.04.2023 முதல் வார்டு எண்.15, கே.விஜயன் ஒப்பந்தக்குழுவின் உறுப்பினராக உள்ளார். அறிக்கையாண்டில் கூட்டங்கள் நடைபெறவில்லை.

3. வழக்குகளும்சட்ட செலவுகளும்:–

அறிக்கையாண்டில் ரூ.60,000/– வழக்குகள் கட்டணமாக செலவாகி உள்ளது. இது கடந்த ஆண்டு ரூ.1,30,000/– செலவாகியுள்ளது.

4. ஆணையாளர்கள்:–

அறிக்கையாண்டில்கீழ்க்கண்டவாறுஆணையாளர்கள்பணிபுரிந்துஉள்ளனர்.

| வ. எண் | நகராட்சிஆணையாளர்பெயர்திரு/திருமதி | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | ஏ.திருநாவுக்கரசு, ஆணையாளர் | 01.04.2023 | 30.06.2023 |
| 2 | பெ.சிசில்தாமஸ், பொறியாளர் (ம) ஆணையாளர்(பொ) | 01.07.2023 | 04.07.2023 |
| 3 | பி.சந்தானம், ஆணையாளர் (பொ) | 05.07.2023 | 18.07.2023 |
| 4 | மு.மங்கையர்க்கரசன் | 19.07.2023 | 31.03.2024 |

அறிக்கையாண்டில்கீழ்க்கண்டவாறுஅலுவலர்கள்பணிபுரிந்துஉள்ளனர்.

| வ. எண் | நகராட்சிஅலுவலர்கள்பெயர்திரு/திருமதி | முதல் | வரை |
|---|---|---|---|
| 1 | பெ.சிசில்தாமஸ், பொறியாளர் | 01.04.2023 | 02.08.2023 |
| 2 | வெ.சம்பத், உதவி செயற்பொறியாளர் | 03.08.2023 | 31.03.2024 |
| 3 | தா.க.சுகந்தி, மேலாளர் | 01.04.2023 | 31.03.2024 |
| 3 | கோ.தங்கராஜ், கணக்கர் | 01.04.2023 | 06.10.2023 |
| 4 | வா.யுவராஜ், கணக்கர் | 07.10.2023 | 31.03.2024 |
| 5 | கொ.பிரபுதாஸ், துப்புரவு ஆய்வர் (ம) துப்புரவு அலுவலர் (பொ) | 01.04.2023 | 13.06.2023 |
| 6 | Z.அலி, துப்புரவு ஆய்வர் (ம) துப்புரவு அலுவலர் (பொ) | 14.06.2023 | 15.10.2023 |
| 7 | M.S.முகமதுஇக்பால். துப்புரவு அலுவலர் | 16.10.2023 | 29.02.2024 |
| 8 | Z.அலி, துப்புரவு ஆய்வர் (ம) துப்புரவு அலுவலர் (பொ) | 01.03.2024 | 14.03.2024 |
| 9 | வி.பாலசந்தர், துப்புரவு அலுவலர் | 15.03.2024 | 31.03.2024 |
| 10 | கே.சீனிவாசன் நகரமைப்பு ஆய்வர் | 01.04.2023 | 15.03.2024 |
| 11 | கே.சீனிவாசன் நகரமைப்பு அலுவலர் | 15.03.2024 | 31.03.2024 |

5) நகரமன்ற பொறியாளர்:–

01.04.2023 முதல் 03.08.2023 வரை பெ.சிசில்தாமஸ் பொறியாளராகவும் மற்றும் 03.08.2023 முதல் 31.03.2024 வரை திரு.வே.சம்பத் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

6) நெடுஞ்சாலைகள்:–

| | | |
|---|---|---|
| 1. காட்பாடி | – | வெங்கட்டகிரி கோட்டை சாலை |
| 2. சித்தூர் | – | பலமநேரி சாலை |
| 3. பேர்ணாம்பட்டு | – | ஆம்பூர் சாலை |
| 4. வேலூர் | – | பள்ளிகொண்டா சாலை |
| 5. மேல்பட்டி | – | கடாம்பூர் சாலை |

மேற்படி சாலைகள் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சாலைகள் தூசி இல்லா தார்தளம் போடப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் நகராட்சியினரால் பராமரிக்கப்பட்ட சாலைகள் விவரம் வருமாறு

| | | |
|---|---|---|
| 1. சிமெண்ட் சாலை | – | 20.558 கி.மீ |
| 2. தார்தளம் | – | 38.858 கி.மீ |
| 3. பேவர்பிளாக் சாலை | – | 3.500 கி.மீ |
| மொத்தம் | – | 92.916 கி.மீ |

சாலை பாமரிப்பிற்கான அறிக்கையாண்டில் ரூ.669.11 இலட்சம் செலவிடப்பட்டது .கடந்த ஆண்டு சாலை பராமப்பிற்காக செலவிடப்பட்டத் தொகை ரூ.349.69/– இலட்சம் ஆகும்.

7) பாலங்கள், நடைபாதைகள் மற்றும் மதகுகள்:–

இந்நகராட்சியில் நடுவே உள்ள கவுண்டன்ய ஆற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டபாலம் மற்றும் ஒரு தரைபாலம் ஒன்று மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக உள்ளது.

நகரின் நடுவே உள்ள மிகப்பெரிய பாலம் "காமராஜர் பாலம்" செவ்வனே தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு போக்குவரத்திற்கு மிகவும் பயன் உள்ளதாக உள்ளது.

8) பயணியர் விடுதி:–

மேற்படி கட்டிடம் போக்குவரத்து காவல் துறையினருக்கு வாடகை விடப்பட்டுள்ளது.

9) சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்:–

சத்திரங்கள் எதுமில்லை.

10) விளக்கு வசதிகள்:–

அறிக்கையாண்டில் நகரத்தின் மொத்தம் 3419 மின்விளக்குகள் இருந்தன.

மின்விளக்கு விவரம் வருமாறு 2023–2024:–

| | | |
|---|---|---|
| 1. LED விளக்குகள் | – | 3364 எண்ணிக்கை |
| 3. உயர்மின் கோபுர விளக்குகள் | – | 55 எண்ணிக்கை |
| மொத்தம் | – | 3419 எண்ணிக்கை |

தெருவிளக்குகள், மின் பணியாளர்களைக் கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் மின்சார வாரியத்திற்கு செலுத்திய தொகை ரூ29202560/– இலட்சம் சென்ற ஆண்டு மின்சார வாரியத்திற்கு செலுத்திய தொகை ரூ.1846522/– இலட்சம்.

11) பொது சுகாதாரம்:–

ஒரு துப்புரவு ஆய்வர் மற்றும் ஐந்து துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் அறிக்கையாண்டில் பணியாற்றினர். இவர்களுக்கான அறிக்கையாண்டில் ரூ.9640684/–செலவிடப்பட்டது. இச்செலவு கடந்த ஆண்டு ரூ.4123916/– ஆகும்.

12) நலமுறை விளம்பரம்:–

நோய் தடுப்பு பணி பற்றி பொது மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டது. பேனர்கள், படக்காட்சிகள் மற்றும் துண்டு பிரச்சுரங்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது.

13) பிறப்பு, இறப்பு, மகப்பேறு உதவி 2023–2024:–

பிறப்பு, இறப்பு பதிவுகள் இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் மூலம் பதிவு செய்யப்பட்டு வருகிறது

| | | |
|---|---|---|
| அறிக்கையாண்டில் பதிவான பிறப்பு | – | 148 ஆகும் |
| அறிக்கையாண்டில் பதிவான இறப்பு | – | 431 ஆகும் |

அறிக்கையாண்டில் இந்நகராட்சி எல்லையில் அரசு தொடக்க பள்ளிகள் 16– ஆம் அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகள் 8 ஆகும். மேலும், இந்நகராட்சி எல்லையில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளது.பள்ளிகள் எதுவும் நகராட்சியால் நிர்வகிக்கப்படவில்லை. கட்டிடங்கள் மற்றும் தளவாட சாமான்கள் மட்டும் 17 பள்ளிகளில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>14) மேல்நிலைப்பள்ளி:–</u>

நகராட்சி மேல்நிலைப்பள்ளி கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ளதால் நடப்பு ஆண்டில் நகராட்சியிலிருந்து செலவினமும் இல்லை.

<u>15) பொது நூலகங்கள்:–</u>

பொது மக்களின் வசதிக்காக இரண்டு நூலகங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

<u>16) மகப்பேறு</u>:–

தற்போது இந்நகராட்சியில் மகப்பேறு திட்டம் பொது சுகாதார துறை, நகர்நல மைய மருத்துவர்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

<u>17) பெரியம்மை:–</u>

அறிக்கையாண்டில் பெரியம்மை நோய் முகாம் ஏதும் நடைபெறவில்லை.

<u>18) யாணைக்கால் நோய் தடுப்பு திட்டம்:–</u>

இத்திட்டத்தின் கீழ் ஆறு மருந்து தெளிக்கும் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மேற்கண்ட பணியாளர்களை களப்பணி உதவியாளர் 25.02.2011 முதல் பணியாற்றி கண்காணித்து வருகிறார். நகரில் கொசு மருந்து 36 வார்டுகளுக்கு மருந்து தெளிக்க 6 கொசு தெளிப்பான்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொசு ஒழிப்பிற்காக Pythirim, Abate, இதற்கான கடந்த ஆண்டில் ரூ.14,00,000 செலவினம் ஆகும். மேற்கண்ட பணிகளை துப்புரவு ஆய்வாளர் கூடுதல் பணியாக ஒருங்கிணைந்து செய்து வருகிறார்.

<u>19) துப்புரவு:–</u>

அறிக்கையாண்டில் 10 கழிப்பிடங்கள் மற்றும்சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்பட்டு வந்தன. தெருக்களில் விழும் குப்பை கூளங்கள் பிரித்து வாங்கி சேகரிக்கப்பட்டு லாரிகள், ஆட்டோக்கள், பேட்டரி வாகனங்கள் மூலமாகவும் உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்பட்டது. லாரிகள் மற்றும் பழுதடைந்த தள்ளுவண்டிகள் ஏலம்விட நடவடிக்கையில் உள்ளது. குப்பை கூளங்களை

அகற்றுவதற்கு 22 மின்கலனில் இயங்கும் வண்டிகள் உபயோகத்தில் இருந்து வருகிறது.

இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்களுக்கு தளவாட சாமான்கள் மற்றும் கம்பூட்ஸ், கையுறை, காலனிகள், முகவுரை மற்றும் சீருடை வழுங்கப்பட்டது. இதற்கான செலவின தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும்.

அறிக்கையாண்டில் தூய்மைப்பணியாளர்களுக்கு என செலவிடப்பட்ட தொகை ரூ.310.07 இலட்சம் ஆகும். கடந்த ஆண்டு தூய்மைப்பணியாளர்களுக்கு என செலவிடப்பட்ட ஊதியம் தொகை ரூ.297.59 இலட்சம் ஆகும்.

**20) உரம்:-**

சேகரிக்கப்படும் குப்பைகள் பிரித்தெடுக்கப்பட்டு வருகிறது. இதற்கென மூன்று தூய்மைப்பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். குப்பைகள் உள்ளி என்ற கிராமத்தில் உள்ள நுண்உயிர் உரகிடங்கில்(MCC) சேமிக்கப்பட்டு வருகிறது. புதிய உரக்கிடங்கிற்கான இடம் செட்டிக்குப்பம் மற்றும் எர்த்தாங்கல் கிராமத்தில் 5.17 ஏக்கர் பரப்பளவில் ரூ.4.32/- இலட்சம் செலவில் 05.08.2008 இல் வாங்கப்பட்டது.

**21) ஆடுவதை சாலை:-**

நகராட்சிக்கு சொந்தமான ஆடு அறுக்கும் கூடம் 2006-07-ல் நவீன முறையில் கட்டப்பட்டு நல்ல நிலையில் இயங்கப்பட்டு வருகிறது.

**22) சத்துணவு:-**

குடியாத்தம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர்சத்துணவு திட்டம் 17 பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை | - | 15 |
| 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை | - | 1 |
| 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை | - | 1 |
| மொத்தம் | - | 17 |

சத்துணவு பணிக்காக 17 மையங்களில் 26 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

| | | |
|---|---|---|
| அமைப்பாளர் | - | 6 |
| சமையலர் | - | 12 |
| சமையல் உதவியாளர் | - | 8 |
| மொத்தம் | - | 26 |

மேற்கண்ட 17 மையங்களில் முதல் மற்றும் 3 ஆம் வாரம் – கொண்டகடலை, 2வது மற்றும் 4வது வாரம் – பச்சை பயிறு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. 820 மாணவ மாணவியர் சத்துணவு உண்ணுகின்றனர். பள்ளி மாணவர்களுக்கு தரமான முறையில் சத்துணவு செய்து தரப்படுகின்றது.

வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை ஐந்து தினங்களுக்கு உணவுடன் முட்டை வழங்கப்படுகிறது. மேலும் மாதத்தின் முதல் வாரம் மற்றும் 3 ஆம் வாரம் செவ்வாய் அன்று கொண்டகடலை மற்றும் இரண்டாம் வாரம் மற்றும் 4 ஆம் வாரம் வியாழக்கிழமை பச்சைபயிறு சுண்டலாக செய்து ஒரு மாணவருக்கு 20 கிராம் வழங்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை அன்று உருளைக்கிழங்கு வேகவைத்து 1 மாணவருக்கு 20 கிராம் வீதம் வழங்கப்படுகின்றது.

23) மின்னாளுமை (E-goverance):–

இந்நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு பொது நிதிமூலம் விலையின் அடிப்படையில் கணினிகள் மற்றும் Catridge–கள் அலுலவக பயன்பாட்டிற்கு வாங்குவது வழக்கம். 2023–2024 ஆம் ஆண்டிற்கு புதியதாக எதுவும் வாங்கப்படவில்லை

பொறியாளர், துப்புரவு ஆய்வாளர், கணக்கர், வருவாய் ஆய்வாளர், இ2 இளநிலை உதவியாளர் தனியாக கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வைக்கப்பட்டு Local Area Network மூலம் சர்வர் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர்க்கு தனியாக கணினிகள் மற்றும் Laserjet Printer–கள் வழங்கப்பட்டுள்ளது. Website–இல் Works Details Upload செய்யவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் சொத்துவரி, தண்ணீர் கட்டணம், கடை வாடகை மற்றும் வரியில்லா இனங்கள் ஆகிய அனைத்திற்கும் கணினிகள் மூலம் இரசீதுகள், பிறப்பு, இறப்பு சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் வரி மற்றும் வரியில்லா இனங்களை பொதுமக்கள் tnurbanepay.tn.gov.in என்ற வலைதள சேவை வாயிலாகவும் செலுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

24) அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க வணிகங்கள்:–

அறிக்கையாண்டில் நகராட்சிக்குட்பட்ட எல்லா அச்சம் மற்றும் அருவருப்பு வணிகங்களும் உரிமையாணை வழங்கப்பட்டது. அறிக்கை ஆண்டில்

உரிமையாணைக் கட்டணத் தொகை ரூ.393479/– வசூலிக்கப்பட்டது. சென்ற ஆண்டு வசூலிக்கப்பட்டது ரூ.357891/–

25) சந்தைகளும், திருவிழாக்களும்:–

இந்நகராட்சியில் தினசரி காய்கறி சந்தை உள்ளது. ஸ்ரீகெங்கையம்மன் திருவிழா வைகாசி 1–ஆம் தேதி சிறப்பாக நடைபெறும் விழாவிற்கு மாவட்ட அளவிலான விடுமுறை விடுவது வழக்கம். 2023–2024 ஆம் ஆண்டிற்கான கெங்கையம்மன் கோவில் திருவிழா செலவினம் ரூ. 5.00 இலட்சம்ஆகும்.

26) குடிநீர் விநியோகம்:–

நகரத்தில் ஏற்கனவே உள்ள குடிநீர் திட்டம் நகர மக்களுக்கு போதுமானதாக இல்லாததாலும் தற்போது காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் இந்நகராட்சி சேர்க்கப்பட்டுள்ளதால் திட்டம் முடிவடையும் பொழுது நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 92 LPCD வீதம் குடிநீர் வழங்க இயலும்.

மேலும், நகரில் குடி தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய இந்திய மார்க் ஆழ்த்துளை கிணறு கைப்பம்புகளில் 0எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு வருகிறது மற்றும் 318 மினி பவர் பம்பு மூலம் குடிநீர் வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

நகரில் மொத்தம் 347பொதுக் குழாய்கள் உள்ளது.

இந்நகரில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் 11163 வீடுகளுக்கு கொடுக்கப்பட்டு இருந்தன. இதில் வீட்டு உபயோகத்திற்கு 11046 குழாய் இணைப்புகளும் மற்றும் வீட்டு உபயோகமில்லா காரணத்திற்காக 117 குழாய் இணைப்புகளும் இருந்தன. அறிக்கையாண்டில் இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது.ஒவ்வொரு நபருக்கும் 92 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டது.

அறிக்கையாண்டில் நீர் அளிப்பு தலைப்பின் கீழ் பராமரிப்புச் செலவு ரூ.1,65,00,000/– இலட்சம்

27) பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு:–

இந்நகராட்சியில் தீ அணைப்பு திட்ட நிலையம் ஏதும் பராமரிக்கப்படவில்லை. அரசினால் தீயணைப்பு நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

28) வருவாய் தரும் இனங்கள்:–

குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றில் குடியிருப்புக்கு நகராட்சி ஊழியர்களுக்கு

குடியிருப்பவர்களுக்கே 01.10.1980-ஆம் தேதிய 173 எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்டு கிரயம் செய்து மேற்படி கிரயத் தொகையை ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்டது.

நகராட்சி ஆணையாளர், பொறியாளர் ஆகியோர்களுக்கு குடியிருப்பு வீடுகள் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. புதியதாக குடியிருப்பு அமைக்க அரசிடம் உரிய நிதி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

29) வளர்ச்சிப் பணிகள் 2023-2024:-

அறிக்கையாண்டில் அரசிடமிருந்து நிதியுதவி வரப்பெற்ற கீழ்க்கண்டவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டும் சிலப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

தூய்மை இந்தியா திட்டம் (Bio-Mining) – 2018 – 2019

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Biomining Process of 111720 CUM Legacy waste @ Ulli and Erthangal Compost Yard. | 713.47 |

தூய்மை இந்தியா திட்டம் 2.0 (Bio-Mining) – 2023 – 2024

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Biomining Process of 19460 MT Legacy wastes @ Erthangal Compost Yard. | 145.00 |

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) – 2018 – 2019

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of 30 KLD Fecal Sludge Treatment Plant in Ulli Compost Yard | 320.00 |

15-வது நிதிக்குழு திட்டம் – 2021 – 2022 (ம) 2022-2023

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Supply & Delivery of Shredder with belt conveyor -2 Nos for Erthangal Compost Yard | 10.00 |
| 2 | Providing Segrigation shed for SWM in W.No.16 | 10.00 |
| 3 | Providing platform facility for segrigation purpose in W.No.9 | 9.00 |

| | | |
|---|---|---|
| 4 | Providing Reuse Water facilities for domestic purpuse in Municipal Office | 24.00 |
| 5 | Construction of Compound Wall at Santhapet OHT | 20.00 |
| 6 | Replacement of Sluice Valve in Distribution System ward no.1,2,6 | 6.00 |
| 7 | Providing Cable and pipe line arrangement to Infiltration well in PasumathurHeadworks | 10.00 |
| 8 | Providing R.O.Drinking water facility in Mpl.Office | 7.00 |
| 9 | Construction of Urban Health Wellness Centre at Bandar Colony in Ward no.18 | 25.00 |
| 10 | Construction of Urban Health Wellness Centre at PavodumThoppu in Ward no.27 | 25.00 |
| 11 | Providing 90mm PVC Distibution Main for Water Supply in Sakthivel Nagar (Unicode 027/2021/007/R/0000348-Length-150m) in ward no.7 and Ashok Nagar (Unicode 027/2021/015/R/0000214-Length-398m) in ward no.15 | 2.00 |
| 12 | Supply and fixing of 12V 100AH Battery 125Nos for 25 No's of BOV in Gudiyatham Municipality | 7.00 |
| 13 | Purchase of Backhoe Loader for Gudiyatham Municipality | 33.00 |
| 14 | Purchase of 2 Nos.of Horizontal Split Casting Centrifugal Motor & Pump with Starter in Pasumathur Head works | 37.00 |
| 15 | Providing Childern Park playfield arrangements in Nehru Park ward No.36 (Foot Path, Play material, Lighting arrangement) | 9.00 |
| 16 | Improvement work in Municipal Elementary School in Kamatchiammanpet&Dharnampet ward no.2 and 32 (Flooring, Roof for Noon meal centre, Electical and Water supply arrangement) | 13.80 |
| | Total | 247.80 |

15-வது நிதிக்குழு திட்டம் - 2023 - 2024

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Purchase of 13Nos. LCV as per specifications | 94.90 |
| 2 | Repairing and Maintenance work in Seruvangi Toilet | 2.30 |
| 3 | Repairing and Maintenance work in Thalayatham Toilet | 5.00 |

கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) - 2021 - 2022

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing Children's Park and Play Field at Arun Nagar | 50.00 |

| | | |
|---|---|---|
| 2 | Providing BT Surface with Drain to R.S.Road PATC Opp 027014R241, Thirumalai Garden 2nd Street Lane 027016R298, Perumal Nagar 027016R301, Sri Lakshmi Nagar (1,2,3) 027026R456, Kumaran Street 027027R473, Atroram 027027R474, Selliyamman Street 027027R475, Thennanthoppu Street-2 027033R566, Sai Nagar 2nd Lane 027036R622, at Ward No.14,16,26,27,33 & 36 | 201.56 |
| 3 | Providing CC Paver Block with Drain to Sheriff Nagar 4th Street Lane 027001R011, Zubeda Nagar 4th street 027001R016, Periamajid street lane 027006R060, Ragavendra street lane 027016R300, MandaveliPudu Street 027019R344, AnnaiSathya Street 027027S18, Ramakrishna nagar 027033R554, ThalayathamAtroram 027035L14, JothimadamAtroram 3rd Street 027036L15, Sai Nagar 3rd Lane 027036S34 at Ward No.1,6,16,19,27,33,35 & 36 | 61.53 |
| 4 | Construction of Modern LPG Crematorium Toilet Block and parking shed in Municipal Burial Ground at Gudiyatham Municipality | 150.00 |
| | Total | 463.09 |

## கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) – 2022 – 2023

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Park at Perumal Nagar Ward No.7, Block 2, TS.No.373/27 in Gudiyatham Municipality | 29.00 |
| 2 | Park at Vaitheeswaran Nagar 2, Ward No.7, Block 8, T.S.No.1052 in Gudiyatham Municipality | 36.00 |

## கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) – 2023 – 2024

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Knowledge centre @ Mpl Hr.sec school | 219.00 |

## நமக்கு நாமே திட்டம் (NNT) – 2021 – 2022

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Conversion of Fire Wood Crematorium to LPG Crematorium | 39.00 |

## AMRUT 2.0 – 2022 – 2023

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Improvement of Water Supply and Soucre augumentation to Gudiyatham Municipality | 1292.00 |
| 2 | Providing Children's Park and Play Field at Raja Nagar | 13.90 |

## AMRUT 2.0 – 2023 – 2024

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Improvement of Waterbodies work in Robinson Tank in Gudiyatham Municipality | 13.00 |

## NUHM – 2022 – 2023

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Urban Health Centre Building at Nadupet in Gudiyatham Municipality | 120.00 |

## CGF – 2023 – 2024

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing RCC SWD Channel and Culvert at Sheriff Nagar to Bodipet Main Road at Ward No 01, 07, 22 & 23 and Bosepet Main Road at Ward 33 & PCC SWD and Culvert to Ward 02, 04, 06, 08, 09 & 10 in Gudiyatham Municipality | 591.00 |

## MPLADS – 2022 – 2023

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of Bus Shelter @ Ward no.15 Polytechnic road Junction in Gudiyatham Municiplaity | 11.00 |
| 2 | Construction of Bus Shelter @ Ward no.36 Ashok Nagar Junction in Gudiyatham Municiplaity | 11.00 |
| 3 | Construction of Bus Shelter @ Ward no.26 Pernambut road Junction in Gudiyatham Municiplaity | 11.00 |
| 4 | Construction of Padipagam at ward no.36 Ashok nagar | 6.00 |

## MLA – 2023 – 2024

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Construction of SWD in South Mada Street at ward no.26 in Gudiyatham Municipality | 5.00 |
| 2 | Providing Paver Block Road with SWD in Sakthi Nagar at ward no.8 in Gudiyatham Municipality | 5.00 |
| 3 | Construction of SWD in Aliyar Street at ward no.6 in Gudiyatham Municipality | 7.00 |

| | | |
|---|---|---|
| 4 | Providing RO Room at ward no.16 in Gudiyatham Municipality | 6.00 |
| 5 | Providing Paver Black Road at Selva Perumal Kovil 1st Cross Street 027024R452 Ward No.24 in Gudiyatham Municipality | 4.00 |
| 6 | Providing Paver Black Road at PAVODUM THOPPU STREET 027025R462 Ward No.25 in Gudiyatham Municipality | 3.00 |
| 7 | Providing SWD and CC Road at Perumal Kovil Street 1st Lane 027036R278 Ward No.36 in Gudiyatham Municipality | 5.00 |
| 8 | Providing Paver Black Road at Bangaru Chetty Street Ward No.20 in Gudiyatham Municipality | 5.00 |
| 9 | Construction of SWD in Rasi Arunachalam Street at ward no.21 in Gudiyatham Municipality | 5.00 |
| 10 | Construction of SWD in South Mada Street at ward no.26 in Gudiyatham Municipality | 5.00 |
| 11 | Providing Paver Block Road with SWD in Sakthi Nagar at ward no.8 in Gudiyatham Municipality | 5.00 |
| 12 | Construction of SWD in Aliyar Street at ward no.6 in Gudiyatham Municipality | 7.00 |
| 13 | Providing RO Room at ward no.16 in Gudiyatham Municipality | 6.00 |
| 14 | Providing Paver Black Road at Selva Perumal Kovil 1st Cross Street 027024R452 Ward No.24 in Gudiyatham Municipality | 4.00 |
| 15 | Providing Paver Black Road at PAVODUM THOPPU STREET 027025R462 Ward No.25 in Gudiyatham Municipality | 3.00 |
| 16 | Providing SWD and CC Road at Perumal Kovil Street 1st Lane 027036R278 Ward No.36 in Gudiyatham Municipality | 5.00 |
| 17 | Providing Paver Black Road at Bangaru Chetty Street Ward No.20 in Gudiyatham Municipality | 5.00 |
| 18 | Construction of SWD in Rasi Arunachalam Street at ward no.21 in Gudiyatham Municipality | 5.00 |

<u>30) சந்தை மற்றும் கடைகள்:–</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் ஒரு தினசரி சந்தை பராமரிக்கப்பட்டு வந்தது.

இதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ.7439996 வரவாகும், கடைகளில் வாடகை தண்டல் உரிமை தவிர சந்தைகளின் கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு வழக்கம் போல் பொது ஏலம் விடப்பட்டது.

வீரபத்திரன் தெரு 20 கடைகளும், ஐயுடிபி கடைகள் வீரபத்திரன் தெரு, காம்பளக்ஸ் 18 கடைகளும், ஜே.கே.தெருவில் 17 கடைகளும், மேற்கு குளக்கரையில் 24 கடைகளும், அரசு மருத்துவமனை சாலையில் 3 கடைகளும், நகராட்சி

அலுவலகத்தை சுற்றியுள்ள பழைய 18 கடைகளும், தென்குளக்கரையில் 24 கடைகளும், அண்ணா தெருவில் 12 கடைகளும், சந்தப்பேட்டை வார கால்நடை சந்தையில் 10 கடைகளும், தாழையாத்தம் பஜாரில் 5 கடைகளும் அறிக்கையாண்டில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

IDSMT திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 140 கடைகள் ஏலம் விடப்பட்டு வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் மேற்படி கடைகள், பங்க் கடைகள் மூலம் வருவாய் ரூ.194.75 இலட்சம் ஆகும். இது கடந்த ஆண்டு ரூ.91.95 இலட்சம் ஆகும்.

<u>31) பேருந்து நிலையம்:-</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சியினால் இரண்டு பேருந்து நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வட்டார போக்குவரத்து அலுவலர், வேலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ2/29618/2012 நாள்.09.04.2018 பேருந்து நிலையத்திற்கும் 07.05.2021 முதல் 06.05.2024 வரை அங்கீகாரம் புதுப்பி உத்தரவிடப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் போருந்துகளுக்கு சி பிரிவாக அங்கீகரித்து நாள் ஒன்றுக்கு ரூ.8/- ஆக வசூலிக்கப்பட்டு வந்தது.

பேருந்து ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.8/- ஆக கட்டணம் வசூல் செய்யும் உரிமைக்கு குத்தகைக்கு விடப்பட்டது.அறிக்கையாண்டில் வருவாய் ரூ.1008893/- ஆகும்.

நகர பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம், கட்டண கழிப்பறை ஆகியவைகளை பயணிகள் வசதிக்காக கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது. நடப்பு ஆண்டில் கட்டணம் கழிப்பறை வருவாய் ரூ.1288193 ஆகும்.

<u>32) ஆடு அடிக்கும் இடம்:-</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் ஆடு அடிக்கும் சாலை ஒன்று பராமரிக்கப்பட்டு வந்தது. ஆடு ஒன்றுக்கு ரூ.20/- சுங்கம் நிர்ணயம் செய்யப்பட்டன. கட்டணம் தண்டல் உரிமை ஏலத்தில் விடப்பட்டது.

அறிக்கையாண்டில் ஆடு அடிக்கும் இடம் வருவாய் ரூ.465570/- ஆகும்.

33) மரம் நடுதலும் பூங்காக்களும்:–

அறிக்கையாண்டில் 10 மரங்கள் பராமரித்து வரப்பட்டது. இதன் மூலம் அறிக்கையாண்டில் ரூ.0.43 இலட்சம் வருவாய் ஆகும்.

34) நகரமைப்பு பிரிவு :–

நகராட்சியில் நகரமைப்பு அலுவலர் ஒருவர் அறிக்கையாண்டில் பணியாற்றி வந்தார்.

35) நகரமைப்புத் திட்டங்கள்:–

குடியாத்தம் நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள் (Approved Scheme) ஏதும் இல்லை.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் புதிய திட்டங்கள் (New Scheme) தொடர்பாக புதிய திட்டங்கள் ஏதும் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை.

36) முழுமைத் திட்டம்:–

குடியாத்தம் உள்ளூர் திட்டப் பகுதியினை நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அலுவலகத்தால் நில உபயோக அளவை மற்றும் மறு ஆய்வு செய்து அப்பகுதிக்கு முழுமை திட்டம் தயாரிக்கப்பட்டுஅரசாணை எண்.144 மி.வ.ந.வ.துறை நாள்:04.06.2004–இல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் பெறுவது சம்மந்தமாக தமிழக அரசிதழ் 5–ஆம் தேதி ஏப்ரல் 2006 இல் பிரசுரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

37) கட்டி அனுமதி அளிக்கப்பட்ட விவரம் (2023–2024):–

| கட்டிட அனுமதி கோரி வந்தவை | அனுமதி அளிக்கப்பட்டவை | அனுமதி மறுக்கப்பட்டவை | திருப்பி அனுப்பப்பட்டவை | மேல் முறையீடு செய்தவை |
|---|---|---|---|---|
| 150 | 144 | 6 | 0 | 0 |

01.04.2023 முதல் 31.03.2024 வரை 68கட்டிட உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

38) வரை கடப்புகள்:–

1. ஆண்டு தொடக்கத்தில் இந்த வரைக் கடப்புகள் – இல்லை
2. அறிக்கையாண்டில் கண்டுபிடிக்கப்பட்டவை – இல்லை
3. மொத்தம் – இல்லை

4. முடிவுற்றவை – இல்லை

5. ஆண்டு இறுதியில் நிலுவை – இல்லை

39) பொது வருவாய்:–

வருவாய் பிரிவு:–
சொத்துவரி:–

அ) பிரிவு 81–ன் கீழ் சொத்துவரி அரையாண்டிற்கு:–

1. பொதுகாரியங்களுக்கு வரி – 10%
2. குடிநீர் வினியோகம் மற்றும் கழிவுநீர் வரி – 5%
3. கல்வி – 2.5%
4. நூலகவரி – 1.5%
மொத்தம் – 19%

ஆ) பிரிவு 81(3)–ன் கீழ் காலிமனை வரி:–

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2023–2024 நிதியாண்டில் மொத்த சொத்து வரி 20678 ஆகும்.அதன் கேட்பு 474.27 இலட்சமாகும். இதில் 397.96 இலட்சம் வசூலாகி 76.31 இலட்சம் நிலுவையில் உள்ளது.

காலிமனை வரி 1595 எண்ணிக்கையாகும். அதன் கேட்பு 48.85 இலட்சமாகும். இதில் 31.13 இலட்சம் வசூலாகி 17.73 இலட்சம் நிலுவையில் உள்ளது.

கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரம் 2023–2024

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | வரியினம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 474.27 | 397.96 | 76.31 |
| 2 | தொழில்வரி | 115.72 | 55.02 | 60.71 |
| 3 | வரியில்லா இனம் | 397.86 | 300.38 | 97.47 |
| | மொத்தம் | 987.85 | 753.36 | 234.49 |

நடப்பாண்டில் அதிக சதவீதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

40) கடன்கள்:–

முந்தைய ஆண்டுளில் பெறப்பட்ட கடன்களின் அசல் மற்றும் வட்டி உரிய காலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.அறிக்கையாண்டில் கடன் தொகை தவணை முறையில் நிலுவையின்றி செலுத்தப்பட்டு வருகிறது.

41) முதலீடுகள்:–

1. அறிக்கையாண்டில் தொடக்க மூலதனம் – 573.00 இலட்சம்

2. முதலீடு செய்தது – 358.00 இலட்சம்

3. முதலீடு திரும்ப பெற்றது – 195.00 இலட்சம்

4. இறுதியில் இருந்த முதலீடு – 377.00 இலட்சம்

இந்த நிதியாண்டில் வட்டியுடன் சேர்த்து முதலீடு தொகை 358.00 இலட்சம் வங்கியில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

42) கணக்கு தணிக்கை:–

அறிக்கையாண்டில் 2022–2023 முடிய கணக்குகள் தணிக்கை முடிவுற்றுள்ளது. தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டு தொடக்கத்தில் நிலுவையில் 192 தணிக்கை தடைகள் இருந்தது. அறிக்கையாண்டில் உயர்மட்ட குழு கூட்டம் நடைபெறவில்லை. மேலும், நிலுவை உள்ள தணிக்கை தடைகளை நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023–2024 ஆம் நிதியாண்டின் ஆரம்பத்தில் பொது நிதியில் 128 குடிநீர் நிதியில் 37 ஆரம்ப கல்விநிதியில் 27 ஆக மொத்தம் 192 தணிக்கைத் தடைகள் நிலுவையில் இருந்தது. 31.03.2023 ஆம் தேதிய நிலையில் மொத்தம் 144 தணிக்கைத்தடைகள் மட்டுமே நிலுவையில் இருந்தது.

43) கொடுக்கப்பட வேண்டிய பாக்கி விவரம்:–

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | WSPF | 24.80 |
| 2 | TNUDP சாலை மற்றும் வடிகால் | 133.17 |
| 3 | TNUIFSL | 20.65 |
| 4 | HUDCO | 32.28 |
| | மொத்தம் | 210.90 |

44) போக்குவரத்து – பேருந்து சேவை:–

இந்நகராட்சியில் இரண்டு பேருந்து நிலையங்கள் பராமரித்து வருகிறது. அரசு போக்குவரத்து கழக பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் பொது மக்களின் போக்குவரத்துக்கு போதுமானதாக உள்ளது.

45) சந்தைகள், கட்டண கழிப்பிடம், பேருந்து நிலையம் மற்றும் ஆடு அடிக்கும் தொட்டி விவரம்:–

அறிக்கையாண்டில் மேற்படி தலைப்பின் கீழ் பெறப்பட்ட வருவாய் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | இனம் | 2022–2023 |
|---|---|---|
| 1 | சந்தைகள் மற்றும் கடைகள் | 7439996 |
| 2 | பேருந்து நிலையம் | 1008893 |
| 3 | ஆடு அடிக்கும் சாலை | 465570 |
| 4 | கட்டண கழிப்பிடம் | 1288193 |

இந்நகராட்சியில் நிதி நிலை கடந்த ஆண்டுகளில் மிகவும் பற்றாக்குறையாகவும், செலுத்தப்பட வேண்டிய கடன்கள் பிற்கால சேமிப்பு நிதி தொகைகள் மற்றும் பிற இலாக்காக்களுக்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் தொடர்ந்து அறிக்கையாண்டில் நிலுவையக இருந்து.

46) தேர்தல் :

2011 ஆம் ஆண்டில் மக்கள் தொகை அடிப்படையில் புதியதாக வார்டு மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்கள், அரசியல் கட்சியினரின் கருத்துக்கள் பெறப்பட்டு 2022 இல் நகரமன்ற தேர்தல் நடத்தப்பட்டது.

47) நிர்வாகம் :

01.04.2023 முதல் 31.03.2024 வரை திருமதி.தா.க.சுகந்தி மேலாளராக பணியாற்றியுள்ளார்.

பொதுப்பிரிவு மற்றும் வருவாய் பணியாளர்களின் செலவுகள் விதிகளில் குறிப்பிட்டுள்ள விகிதங்களுக்குட்பட்டு இருந்தது. அறிக்கையாண்டில் கோவை நகரியியல் பயிற்சி நிறுவனத்திற்கு நகராட்சி பங்கு தொகையாக 2023– 2024 ஆம் ஆண்டிற்கு 28.08.2023 அன்று ரூ.75,000/– செலுத்தப்பட்டுள்ளது. ஊழியர் நியமனம் மற்றும் தண்டனை வழங்குதல் சம்மந்தமாக உள்ள பணி விதிகள் யாவும் வழுவாமல் கடைபிடிக்கப்பட்டது.

அறிக்கையாண்டில் நகராட்சி பணியாளர்களின் மொத்த சம்பள செலவு கீழ்க்கண்டவாறு

ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | பொதுபிரிவு | 201.44 |
| 2 | குடிநீர்பிரிவு | 48.55 |
| | மொத்தம் | 252,99 |

<u>48) தகவல் மையம் :</u>

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் இயங்கும் தகவல் மையத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள விவரங்களை உடனுக்குடன் கொடுப்பதுடன் கீழ்க்கண்டவாறு படிவங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பிறப்பு சான்றிதழ் விண்ணப்பங்கள் | 1570 |
| 2 | இறப்பு சான்றிதழ் விண்ணப்பங்கள் | 352 |
| 3 | கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் | 326 |
| 4 | சொத்துவரி பெயர் மாற்ற விண்ணப்பங்கள் | 126 |
| 5 | தொழில் உரிமம் விண்ணப்பங்கள் | 319 |

மேலும், அனைத்து சான்றிதழ்கள், கட்டிட உரிமங்கள், சொத்துவரி பெயர் மாற்ற உத்தரவுகள் ஆகியவை தகவல் மையம் மூலம் பொதுமக்கள் பெற வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான விண்ணப்பங்கள் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் அளிப்பதற்கு தகவல் மையத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி தகவல் மையம் பொதுமக்களுக்கு சேவை செய்கின்ற வகையில் நல்ல முறையில் செயலாற்றி வருகிறது.

<u>49) புதிய கணக்கு முறை :</u>

அரசாணை எண்.3 நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்கல் துறை நாள் : 12.01.2000–ன்படி நகராட்சிகளில் 01.04.2000 முதல் புதிய கணக்கு முறை அமுல்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. புதிய கணக்கு முறைப்படி ஐந்தொகை கணக்குகளாக வருவாய் கணக்கு, மூலதனக்கணக்கு, கல்விநிதி கணக்கு, குடிநீர் கணக்கு மற்றும் நூலகவரித் தொகை கணக்கு ஆகியன பராமரிக்கப்படுகிறது. ஏற்கனவே இருந்த ஒரு பதிவு (Single Entry System) முறைமாற்றப்பட்டு, இருபதிவு முறை (Double Entry System) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு வரப்பெற வேண்டிய வருவாய் குறித்து இனவாரியாகவும் (Assest) மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் குறித்தும் கணக்கீடு (Liability) செய்து நிலை

அறிக்கை (Balance Sheet) தயார்செய்யப்படுவதால், நகராட்சியின் நிதிநிலைமை குறித்து எளிதில் தெளிவாக அறிந்து கொள்ள இயலும் வகையில் புதிய கணக்கு 01.04.2000 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையரால் ஒருங்கிணைந்த இணையவழி மென்பொருள் (CWBS) தயாரிக்கப்பட்டு இந்நகராட்சியில் 01.01.2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

50) கணினி மயமாக்குதல் (E– GOVERENCE) :

சொத்துவரி, தொழில்வரி, அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிம கட்டணம், கட்டிட அனுமதி, பிறப்பு, இறப்பு சான்றிதழ் போன்றவற்றினை கணினிமயமாக்கும் இ–கவர்னென்ஸ் இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

51) பொது :

மூலதனக்கணக்குகள் :

இவ்வாண்டில் எல்லா கணக்குகளின் கீழ் வரவு, செலவு முறையே 2023 – 2024

(ரூபாய் இலட்சத்தில்)

| விபரம் | வருவாய்நிதி | குடிநீர்நிதி | கல்விநிதி |
|---|---|---|---|
| வரவு | 3416.00 | 254.00 | 47.00 |
| செலவு | 4349.00 | 327.00 | 37.00 |

அறிக்கையாண்டில் அரசிடமிருந்து கீழ்க்கண்ட மான்ய திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) | 109.00 |
| 2 | கசடு கழிவு மேலாண்மை – FSTP | -- |
| 3 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 35.89 |
| 4 | இயற்கை இடர்பாடு – பேரிட மேலாண்மை | -- |
| 5 | 15–வது நிதிக்குழு | 201.84 |
| 6 | நகர்ப்புற சுகாதார திட்டம் NUHM | 108.00 |

மூலதனசெலவுகள் :

| | | |
|---|---|---|
| 1 | சாலைகள் | 468.79 |
| 2 | மின்சாதனங்கள் | 88.87 |
| 3 | தளவாடங்கள் | -- |
| 4 | வாகனங்கள் | 23.19 |
| 5 | வடிகால் மற்றும் கல்வெட்டு | 142.94 |

| | | |
|---|---|---|
| 6 | கட்டிடங்கள் | 284.99 |
| 7 | ஆரம்ப கல்வி கணக்கு | 38.18 |
| 8 | குடிநீர் கணக்கு | 51.96 + 552.13 |
| 9 | திடக்கழிவு மேலாண்மை | 350.28 |

52) தொழில்வரி :

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2023–2024 நிதியாண்டில் மொத்த தொழில்வரி 2106 ஆகும். அதன் கேட்பு 115.72 இலட்சமாகும். இதில் 55.02 இலட்சம் வசூலாகி 60.71 இலட்சம் நிலுவையில் உள்ளது.

நடப்பாண்டில் அதிக சதவீதம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

53) சத்துணவு திட்டம் :

15.09.1982 ஆம் ஆண்டிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டு மாணவ, மாணவிகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 17 சத்துணவு மையங்கள் உள்ளன. 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலுள்ள மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு அமைப்பாளர், ஒரு சமையலர், ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டு சிறந்த முறையில் சத்துணவு பணிகள் நடைப்பெற்று வருகின்றது. இத்திட்டம் அரசு ஆணைகளின்படி, சமூகநல துறை கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தினசரி சராசரியாக 820 பிள்ளைகள் பயன்பெறுகின்றனர். வாரத்திற்கு 5 நாட்கள் முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

54) காலை சிற்றுண்டி திட்டம் :

இந்நகராட்சியில் தமிழக முதலமைச்சர் அவர்களின் துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் ஆகஸ்ட் 2023 முதல் 16 நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் 1 அரசு துவக்கப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் 857 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

55) அம்மா உணவகம் :

அறிக்கையாண்டில் நகராட்சி கட்டுப்பாட்டில் ஒரு அம்மா உணவகம் இயங்கி வருகிறது. அரசு விதிகளின்படி, தரமான உணவு தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

56) கசடு கழிவு மேலாண்மை

இந்நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உள்ளி உரக்கிடங்கில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 30 கிலோ லிட்டர் கொள்திறனுடன் அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் நகர்ப்பகுதியில் உள்ள நச்சுகுழி தொட்டிகளிலிருந்து பெறப்படும் கசடு கழிவுநீரை சுத்திகரித்து உபரி நீரை செடிகள் வளர்க்க பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

57) நவீன தகன எரிவாயு மேடை

இந்நகராட்சியில் சுண்ணாம்புபேட்டை மற்றும் மேல்ஆலத்தூர் சாலையில் 2 எண்ணிக்கை சுடுகாடுகள் அமையப்பெற்றுள்ளது.மேற்படி இரண்டு சுடுகாடுகளும் நவீன தகன எரிவாயு மேடைகளாக அமைக்கப்பட்டு எல்பிஜி சிலிண்டர் மூலம் தகனம் செய்யப்படுகிறது. அறிக்கையாண்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் மேல்ஆலத்தூர் சாலையில் உள்ள சுடுகாட்டில் நவீன தகன எரிவாயு மேடை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

58) பூங்கா

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் 5 பூங்காக்கள் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் மற்றும் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

59) நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் காந்திரோடில் புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இடம் : குடியாத்தம்
நாள் : 24.07.2024

ஆணையாளர்
குடியாத்தம் நகராட்சி.

**குடியாத்தம் நகராட்சி**

**நகரமன்ற தீர்மான எண்.121 நாள் : 31.07.2024-ன் உண்மை நகல்**

இந்நகராட்சியின் 2023-2024 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.சி1/1369/2020)

நகரமன்ற தீர்மான எண்.121 அனுமதிக்கப்பட்டது நாள் : 31.07.2024

(ஒம்)மு.மங்கையர்க்கரசன்,
ஆணையாளர்
குடியாத்தம் நகராட்சி

-/ உண்மை நகல் /-

ஆணையாளர்,
குடியாத்தம் நகராட்சி